மாலை முரசு

பக்கங்கள் 14+8

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 12 சனிக்கிழமை 28.09.2024 | அதிர்வு 58

## சிறுவர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் உறவுகள் செவ்வாயன்று போராட்டம்!

(எஸ்.நிதர்ஷன்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கிளிநொச்சியில் 04▸

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# வவுனியா கூட்டத்தில் முரண்பாடு



## பொதுக் கட்டமைப்பு தனிநபர்களின் அமைப்பு என்ற கருத்தையடுத்து

(வவுனியா நிருபர்)

“ஜனாதிபதித் தேர்தலின் போது உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது 7 தனிநபர்களைக் கொண்ட அமைப்பு. அது சிவில் சமூக அமைப்பு கிடையாது” - என்று தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்த நிலையில் வவுனியாவில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் முரண்பாடு ஏற்பட்டது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மாற்றத்துக்கான மாற்று வழி என்னும் கருப்பொருளில் வவுனியா, வாடி வீட்டில் சிவில் அமைப்புக்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை இடம்பெற்றது. 05▸

## தமிழர் அபிலாஷைகளை முன்கொண்டு செல்லக் கூடியவர்களை நாடாளுமன்றத் தேர்தலில் களமிறக்க வேண்டும் தமிழ்க் கட்சிகள்!

### உண்மை மற்றும் நல்லிணக்க மன்றம் கோரிக்கை



“வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் அபிலாஷைகளை முன்கொண்டு செல்லக் கூடியவர்களைத் தமிழ்க் கட்சிகள் களமிறக்க வேண்டும்.”

– இவ்வாறு வவுனியா மாவட்ட உண்மை மற்றும் நல்லிணக்க மன்றம் கோரிக்கை விடுத்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்குக் கடிதம் அனுப்பிவைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“இலங்கை தேசம் தற்போது மீண்டும் ஒரு தேர்தலை 04▸




# பிரான்ஸ் ஆர்ஜொந்தையில் திலீபனின் நினைவேந்தல்

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 37 ஆம் ஆண்டு நினைவேந்தலும் கேணல் சங்கரின் 23 ஆம் ஆண்டு நினைவேந்தலும் கடந்த வியாழக் கிழமை பிரான்ஸ் ஆர்ஜொந்தையில் தியாகதீபம் நினைவுத் தூபி அமைந்துள்ள திடலில் கொட்டும் மழைக்கு மத்தியில் மிகவும் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றன.

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, ஆர்ஜொந்தை தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரைத் தமிழின உணர்வாளர் சுப்பிரமணியம் தவரூபன் ஏற்றிவைத்தார்.

பிரெஞ்ஸ் தேசியக் கொடியை ஆர்ஜொந்தை நகர பிதா ஜோர்ஜ் மொன்ரோ ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு தமிழ் இளையோர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி அச்சுதாயினி பாக்கியநாதன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து ஈகைச் சுடர் ஏற்றப்பட்டது. இதனையடுத்து மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி இடம்பெற்றது.

தியாகதீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்கான மலர் மாலையை நாட்டுப்பற்றாளர் மாணிக்கம் ஜெயசோதியின் துணைவியார் அணிவித்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து அனைவரும் உணர்வோடு அணிவகுத்து சுடர்ஏற்றி மலர்வணக்கம் செலுத்தினர்.

கடும் மழைக்கும் மத்தியில் நிகழ்வுகள் இடம்பெற்றன.









# ரணில் - சஜித் கூட்டணி சின்னத்தால் இழுபறி!

ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான கூட்டணி அமைப்பது தொடர்பான பேச்சு சாதகமாக முடிவடைவதற்குரிய சாத்தியம் காணப்படுகின்றது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.




நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்க வேண்டிய சின்னம் தொடர்பிலேயே இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று மூன்றாவது நாளாகவும் இடம்பெற்றது.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் மாற்றம் வேண்டும் என்ற கோரிக்கை சஜித் தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிடப்போவதில்லை, தேசியப் பட்டியலிலும் வரப்போவதில்லை என ரணில் அறிவித்துவிட்டதால், தலைமைப் பதவியில் மாற்றம் அவசியமில்லை என ஐ.தே.க. தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அடுத்தது நாடாளுமன்றத் தேர்தலில் தொலைபேசி சின்னத்தில் களமிறங்கும் யோசனையை ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ளது. அவ்வாறு செய்தால் அது தமது தரப்பு அரசியல் அடையாளத்துக்குப் பாதகம் என்பதால் பொது சின்னத்தில் களமிறங்கும் யோசனை ஐ.தே.க. தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை ஏற்பதற்கும் ஐ.தே.க. பச்சைக் கொடி காட்டியுள்ளது. எனவே, சின்னம் இறுதியானால் கூட்டணி பேச்சு வெற்றியளிக்கும் என ஐ.தே.க. உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இன்றும் பேச்சு தொடர்ந்தது. நாளை 29ஆம் திகதிக்குள் இறுதி முடிவொன்றை எட்டுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.



# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக் கூடம் இயங்க ஆரம்பம்!

(த.சுபேசன்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் முதல் தடவையாக நேற்று வெள்ளிக்கிழமை சத்திரசிகிச்சைக் கூடம் இயங்க ஆரம்பித்துள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் புதிதாக சத்திர சிகிச்சைக் கூடக் கட்டடம் மற்றும் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் ஆகியன நிர்மாணிக்கப்பட்ட போதிலும் ஆளணிப் பற்றாக்குறை, வளப் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வருடக்கணக்கில் சத்திர சிகிட்சைக் கூடத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் அண்மையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விவகாரம் உலகளாவிய ரீதியாக பூதாகரமாக வெடித்திருந்த நிலையில் புதிய வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ரஜீவ் சத்திர சிகிச்சைப் பிரிவை இயக்க நடவடிக்கை எடுத்து ள்ளார்.

சத்திரசிகிச்சை நிபுணர் ரவிராஜ், மகப்பேற்று நிபுணர் சிறி சுபாஸ்கரன் உள்ளிட்டோர் அடங்கிய மருத்துவக் குழு சத்திரசிகிட்சை கூடத்தை வெற்றிகரமாக ஆரம்பித்து வைத்துள்ளது.

ஆரம்ப தினத்தில் கேர்னியா நோயாளிக்கான சத்திரகிகிட்சை, இரு சிசேரியன் சத்திர சிகிச்சைகள், மேலும் 4சிறிய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சாவகச்சேரி ஆதார வைத்தியசலையில் சத்திர சிகிட்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக நோயாளர்களை அனுப்பும் நிலைமை வெகுவாக குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# வீதியால் சத்தமாக மோட்டார் சைக்கிள் செலுத்திய இளைஞர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை

## மட்டக்களப்பில் நேற்று இரவு கொடூரம்




(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள சுவிஸ் கிராமத்தில் வீதியால் சத்தமாக மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது என்று கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

சுவிஸ் கிராமத்தைச் சேர்ந்த 19 வயதுடைய தங்கேஸ்வரன் அபிலாஸ் என்ற இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

தாக்குதலை மேற்கொண்டார் என்ற சந்தேகத்தில் 30 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்

உயிரிழந்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொக்குவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தமிழர் அபிலாஷைகளை...**

எதிர்நோக்கி இருக்கின்றது. மக்கள் தங்களுக்கான சட்டவாக்க சபைக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்கின்ற இந்தத் தீர்க்கமான காலகட்டத்தில் அரசியல் தலைமைகளும் ஜனநாயக ரீதியானதும் காலச்சூழலுக்கு ஏற்றதுமான முடிவுகளை எட்ட வேண்டிய தருணத்தில் உள்ளார்கள்.

இந்தக் களச்சூழலில் உண்மை மற்றும் நல்லிணக்க மன்றமாகிய நாம் தமிழ் மக்கள் மத்தியில் பல தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு இருந்தோம். அதன் பிரகாரம் அம் மக்களின் அபிலாஷைகளை முன்னெடுத்து செல்லும் பொருட்டு சில வெளிப்படுத்தல்களை அரசியல் தலைமைகளுக்கு வழங்குவதற்கு உண்மை மற்றும் நல்லிணக்க மன்றம் பொறுப்புடன் செயற்படத் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் உண்மை மற்றும் நல்லிணக்க மன்றம் சில பரிந்துரைகளை முன்வைக்க எண்ணுகின்றது. அவையாவன, இனங்களுக்கு இடையில் குரோதங்களையோ முரண்பாடுகளையோ ஏற்படுத்தாத வகையில் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு உண்மைகளை வெளிப்படுத்தி யதார்த்தபூர்வமான வாக்குறுதிகளை வழங்கி இந்தத் தேர்தலில் அரசியல் தலைமைகள் தங்களுக்கான தேர்தல் தளத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

இதேவேளை, தமிழர் தரப்பில் பல்வேறு நியாயப்பாடான தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. காலா காலமாக அவர்கள் தங்களுடைய அரசியல், சமூக, சமய, கலாசார விடயங்களில் தங்களுக்கான ஒரு உறுதிப்பபானதும் நிலையானதுமான தீர்வை வேண்டி நிற்கின்றனர்.

அந்தவகையில் கடந்த காலங்களைப் போல் அல்லாமல் ஒரு தீர்க்கமானதும் அர்த்த புஷ்டியானதும் தற்கால அரசியல் தளத்துக்கு ஏற்றல் போல் நகர்ந்து செல்லக்கூடிய அரசியல் தலைமைகள் உருவாக வேண்டும் என்பதோடு சட்டவாக்க சபைக்குச் செல்பவர்கள் குற்றச் செயலோடு சம்பந்தமற்றவர்களாகவும் சுயநலம் அற்றதும் ஊழல் மற்றும் அரசியலால் தனிநபர் முன்னேற்றம் போன்றவற்றைத் தவிர்த்து சமூகம்சார் அறிவுடன் அவைசார்ந்த சிந்தனையை மேலோங்கி கொண்டு செல்லக்கூடிய முற்போக்காளர்களை இந்த அரசியல் களத்தில் களம் இறக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையை தமிழ் மக்கள் முன் வைத்திருக்கின்றார்கள்.

ஆகவே, தமிழர்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தின் வலிமையை நிலை நாட்டுவதற்காக தமிழர் தரப்பில் செயல்பட்டு வரும் அரசியல் கட்சிகள் ஓர் அணியில் நின்று அவர்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் எனக் கோருவதுடன் இளம் சமூகத்தினரையும் புதியவர்களையும் களம் இறக்கி ஆரோக்கியம் உள்ள ஒரு அரசியல் தளத்தை உருவாக்க வேண்டும் என்பதோடு தமிழ் மக்களின் உணர்வுசார் விடயங்களை சகோதர சிங்கள மொழி பேசும் மக்களிடம் கொண்டு செல்லும் ஆற்றலுள்ளவர்களையும் தெரிவு செய்ய ஆவன மேற்கொள்ளுமாறும் உண்மை மற்றும் நல்லிணக்க மன்றமானது அரசியல் தலைமைகளிடம் முன்வைக்கின்றது.

தமிழர் தரப்பு அரசியல் கட்சிகள் அனைத்தும் விட்டுக்கொடுப்புகளோடும் மக்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் சிந்தித்து ஓரணியில் செயற்படுவதற்கு ஏற்றால் போல் ஆரோக்கியமான கலந்துரையாடல்களை நடத்தி இந்த நாடாளுமன்றத் தேர்தல் களத்தை சந்திக்க வேண்டும் என உண்மை மற்றும் நல்லிணக்க மன்றம் அனைத்து அரசியல் கட்சிகளிடமும் அரசியல் தலைமைகளிடமும் கோரி நிற்கின்றது." – என்றுள்ளது.

**கிளிநொச்சியில்...**

எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

இது தொடர்பில் வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் தலைவி கலாரஞ்சினி தெரிவிக்கையில்,

"தொடர்ச்சியாக மாதத்தின் இறுதி நாளாகிய 30 ஆம் திகதி எமது உறவுகளைத் தேடிய போராட்டம் நடைபெற்று வருகின்றது. அந்தவகையில் இம்மாதம் அதாவது 30.09.2024 அன்று நடைபெற இருக்கின்ற போராட்டத்தை 01.10.2024 முதலாம் திகதி சிறுவர் தினமான அன்று முன்னெடுக்கவுள்ளோம்." – என்றார்.




# யாழ். பல்கலைக்கழகத்தில் இருவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு!

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடத்தின் வணிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரையும், விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரையும் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் இன்று சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமனங்களுக்கு அமைய, திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடத்தின் வணிகவியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சிவபாலன் அச்சுதன் மற்றும் விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி முருகதாஸ் தணிகைச்செல்வன் ஆகியாரின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் என்பன இன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின்ஆடிப்படையில், வணிகவியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சிவபாலன் அச்சுதன் வணிகவியலில் பேராசிரியராகவும், பௌதிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி முருகதாஸ் தணிகைச்செல்வன் இலத்திரனியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

**வவுனியா கூட்டத்தில்...**

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இதன்போது கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின்தலைவர்வி.எஸ்.சிவகரன்,"அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய சிவில் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும்." – என்று தெரிவித்தார்.

இதன்போது கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும், "ஏற்கனவே கட்சிகள், சிவில் அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து ஒரு தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளனர். பிறகு எதற்கு வேறு அமைப்பு?" – என்று கேள்வி எழுப்பினர்.

இதன்போது பதிலளித்த சிவகரன், "தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்பது 7 தனிநபர்களைக் கொண்ட அமைப்பு. அவர்களுக்குப் பின்னால் எந்த அமைப்பும் இல்லை. அவர்கள் செயற்பாட்டாளர்களே தவிர அமைப்புக்கள் அல்ல. நாம் அமைப்புக்களை உள்ளடக்கி இதை உருவாக்குவோம். அவர்களுடனும் தேவையெனில் பேசுவோம். அங்கும் எமக்குத் தெரிந்தவர்களே உள்ளனர். நிலாந்தன், ஜதீந்திரா, கணேசலிங்கம், விக்னேஸ்வரன் என 7 பேர் உள்ளனர்." – என்றார்.

இதன்போது, சிவகரனின் கருத்துடன் உடன்படவில்லை எனத் தெரிவித்து வவுனியாவைச் சேர்ந்த சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலரும் அதிருப்தியை தெரிவித்து கூட்டத்தில் இருந்து வெளியேறிச் சென்றனர்.

அவர்கள் கருத்துத் தெரிவித்தபோது, "இவர்கள் ஒரு தீர்மானத்துடன் வந்து அதனை இங்கு திணிக்க முயல்கின்றார்கள். ஏற்கனவே ஒரு தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என அமைப்பு ஒன்று உள்ளபோது புதிதாக ஒரு அமைப்பை உருவாக்கி மக்களைக் குழப்பியடிக்கக்கூடாது. அனைவரும் இணைந்து பயணிக்க வேண்டும். அதனால் வெளியேறுகின்றோம்." – என்று தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் க.அருந்தவபாலன், முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர்களான ப.டெனீஸ்வரன், அனந்தி சசிதரன், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





**நமது கருத்து**
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மொட்டின் பரிதாபம்

மொட்டுக் கட்சியில் இருந்த விலகி கடந்த ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொண்ட மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளை மீண்டும் கட்சியின் இணையுமாறு மொட்டுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காகக் கட்சி மறுசீரமைக்கப்படும் என்றும், திறமையான இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் நாமல் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, சிறிலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் முன்னாள் அதிபர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தங்களது ஆதரவை வழங்கியிருந்துனர்.

அதன்போது, திலும் அமுனுகம, அனுப பஸ்குவல், கீதா குமாரசிங்க, அஜித் ராஜபக்ஷ், எஸ்.பி.திஸாநாயக்க, பிரேம்நாத் சி தொலவத்த, கஞ்சன விஜேசேகர உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் சுயேச்சை வேட்பாளராகக் களமிறங்கிய முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளித்திருந்தனர்.

அந்த ஜனாதிபதி தேர்தலில் மொட்டு கட்சியின் சார்பில் நாமல் ராஜபக்ஷவும் களமிறங்கி இருந்தார்.

அச்சமயத்தில் கட்சியின் முடிவுக்கு மாறாக, சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் கட்சியில் மீளவும் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்று நாமல் ராஜபக்ஷ உட்பட கட்சியின் முக்கிய தலைவர்கள் அறிவித்து வந்தனர்.

ஆனால் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் கணிசமான வாக்குகள் பெறுவதற்கு நாமல் ராஜபக்ஷ தவறிய சூழ்நிலையில் அவர்களது மொட்டுக் கட்சி மிக மோசமான பின்னடைவு நிலையைக் கண்டிருக்கின்றது.

இந்தச் சூழலில் மீண்டும் கட்சியைக் கட்டி எழுப்பும் எத்தனமாக இவ்வாறு கட்சி முடிவுக்கு மாறாக நடந்து கொண்டவர்களுக்கு 'பாவ விமோசனம்' அளிக்கும் திட்டம் பற்றி பகிரங்கமாக அறிக்கை விடுகிறார் நாமல் ராஜபக்ஷ.

கட்சியின் மூத்த தலைவர்கள் பலரும் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பின்னால் அணிவகுக்கத் தயாரான நிலையில், அதற்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்து, அவர்களைக் கட்சியை விட்டு சிறிது காலம் வெளியே வைத்திருப்பதன் மூலம், கட்சியின் தலைமை பதவியை குறுக்கு வழியில் - குறுகிய காலத்தில் - இளைஞரான தான் கைப்பற்றிக் கொள்ள முடியும் என்ற எண்ணத்தில் மேற்படி நகர்வை நாமல் ராஜபக்ஷ முன்னெடுத்தார் என்றும் -

அந்தத் திட்டம் அவரைப் பொறுத்தவரை வெற்றிகரமாக கைகூடி இருக்கின்றது என்றும் - அரசியல் வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

கட்சியின் தலைமைத்துவம் இப்போது நாமல் ராஜபக்ஷவின் கைகளில் விழுந்துள்ள போதிலும், கட்சி பெரும் பின்னடைவு நிலையைக் கண்டிருப்பது குறித்து மொட்டுக் கட்சியில் நிலைத்து இருப்பவர்கள் மத்தியில் கூட அதிருப்தி நிலவுவது சுட்டிக் காட்டத்தக்கது.

கட்சியின் தலைமைத்துவத்தை சர்ச்சை இன்றி கைப்பற்றும் நாமலின் திட்டம் 'சத்திர சிகிச்சை வெற்றி; ஆனால் நோயாளி அவுட்!' - என்ற கதையாக முடிந்திருக்கிறது என்பது அரசியல் அவதானிகளின் கருத்தாக உள்ளது.

இந்தப் பொதுத் தேர்தலிலும் மொட்டுக் கட்சி கணிசமான வாக்குகளை எடுத்து மேலெழுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி போன்ற பழம் பெரும் கட்சிகளுக்கு இப்போது நேர்ந்துள்ள கதிதான் இன்று மொட்டுவுக்கும்...!




# கல்லடிக் கடற்கரையில் சிரமதானம் செய்துள்ளனர் ரோட்டரி கழகத்தினர்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட், பழுவூரான்)

மட்டக்களப்பு கல்லடி கடற்கரையைத் தூய்மைப்படுத்திப் பாதுகாப்பதுடன் அந்தப் பிரதேசங்களை மக்கள் பயன் படுத்தும் வகையில் இன்று சனிக்கிழமை (28) கடற்கரை ஓரங்களில் உள்ள பிளாஸ்டிக் பொருள்களை அகற்றும் சிரமதானப் பணிகள் மட்டக்களப்பு ரோட்டரி கழகத்தின் தலைவர் வைத்தியர் கே.முரளிதரன் தலைமையில் மேற் கொள்ளப்பட்டன.

இதன்போது கல்லடி கடற்கரைப் பகுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் பிளாஸ்டிக் போத்தல்கள், பிளாஸ்டிக் பைகள் என்பன அகற்றப் பட்டன.

பிளாஸ்டிக் கழிவுப் பொருள்களை அகற்றும் நிகழ்வில் மட்டக்களப்பு சிகரம் ரோட்டறிக் கழக உறுப்பினர்கள், சாரணர் மாணவர்கள், விளையாட்டுக் கழகம், கல்லடி முதியோர் சங்கத் தலைவர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இவ்விதம் சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருள்களை மட்டக்களப்பு மாநகர சபை கழிவகற்றும் பணியா ளர்கள் தமது வாகனங்களில் பெற்றுச் சென்றனர்.



# விவசாயக் கண்காட்சி!

(எஸ்.நிதர்ஸன்)

வட மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில், "சூழல் நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கி" எனும் தொனிப்பொருளிலான விவசாயக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண விவசாய பிரதிப்பணிப்பாளர் அஞ்சனா ஸ்ரீரங்கன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இரண்டாம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி நான்காம் திகதி வெள்ளிக்கிழமை வரையிலான மூன்று தினங்கள் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

முப்பதுக்கும் மேற்பட்ட விடயத் தலைப்புக்களை உள்ளடக்கியதாக இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



# டயகம லிந்துலை பிரதான வீதி புனரமைக்கும் பணி ஆரம்பம்

(மஸ்கெலியா)

டயகம லிந்துலை பிரதான வீதி புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இதன் போது இந்த வீதியை அகலப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

டயகம ஆட்லி தோட்டத்தை அண்மித்துள்ள பகுதியையும் அகலப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

10 வருட காலமாக பாதை புனரமைக்கும் பணி இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை இப்பகுதியில் உள்ள 10 வீடுகளும் பெரும் சேதம் அடைந்துள்ள நிலையில் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு இதுவரை வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. மலசல கூடம், குடி தண்ணீர், பாதை உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தொடர்ந்து முகம் கொடுத்து வருகின்றனர்.

1964 ஆம் ஆண்டு வீடுகளுக்கு போடப்பட்ட கூரை தகடுகள் இதுவரை மாற்றப்படவில்லை இரவு நேரங்களில் வீடுகளில் உறங்குவதற்கு கூட முடியாமல் மழைநீர் வடிவதால் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டிய நிலைக்கு இங்கு வாழும் மக்கள் தள்ளப் பட்டுள்ளனர்.

இந்தப் பாதிப்பிலிருந்து தம்மை காப்பாற்றுமாறு ஆட்லி தோட்டத்தை சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவாகிய மாணவரைக் கௌரவித்த பழைய மாணவர்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடி மத்திய கல்லூரியில் இருந்து அண்மையில் இடம்பெற்ற தட்டெறிதல் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலிடம் மாணவர் அதீப் அஹமட் மற்றும் அஞ்சல் ஓட்ட போட்டியில் வெற்றியீட்டி தேசிய மட்டத்துக்குத் தெரிவாகிய மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (27) பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள், பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள் அதே போன்று இம் மாணவர்களின் மெய்வல்லுனர் போட்டிகளில் பங்களிப்பு செய்யும் பழைய மாணவர்களும் கலந்து கொண்டனர்.







## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

# 8 லட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகள் நேற்று மட்டும் வழங்கப்பட்டன!

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் மாதாந்த ஆன்மீக வெளியீடான ஞானச்சுடர் 321 ஆவது மலர் வெளியீடும், 8 லட்சத்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவி வழங்கல் நிகழ்வும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலையில் இடம்பெற்றன.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் தலைவரும், ஓய்வு நிலை அதிபருமான ஆ.சிவநாதன் தலைமையில், நேற்று (27) இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில், வெளியீட்டுரை, மதிப்பீட்டுரையை ஆசிரியர் துரை கணேசமூர்த்தி நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

யாழ். பொற்பதி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான நிழற்பிரதி இயந்திரமும், புலோலி தென்மேற்கு மூத்தோர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக மூத்தோர் தினத்தை முன்னிட்டு 60 ஆயிரம் ரூபா பெறுமதியான 300 கிலோ அரிசியும் 25 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தின் கோரிக்கைக்கு அமைவாக, மூத்தோர் தினத்தை முன்னிட்டு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 25 சாரம், 25 சேலைகளும் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் விநாயகர் ஆலய கட்டடப் பணிக்காக 5 லட்சம் ரூபா நிதியும் ஆலய நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டது.

இதேவேளை, திருகோணமலை பெரியகடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கட்டட கட்டுமானப் பணிக்கான நிதியாக ஒரு லட்சம் ரூபா கடந்த 25 ஆம் திகதி ஆலய பரிபாலன சபையிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் நிர்வாகிகள், உறுப்பினர், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள் அடியவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA






# இளைஞர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி அட்டாளைச்சேனையில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு ஸ்ரீலங்கா இளைஞர் அமைப்பு ஒழுங்குசெய்திருந்த அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி அண்மையில் அட்டாளைச்சேனையில் இடம்பெற்றது.

மயோன் கல்வி சமூக உதவி அமைப்பினரும், நிந்தவூர் ஸ்டேன்போட் கல்வி நிறுவகமும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த மேற்படி தலைமைத்துவப் பயிற்சியில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட உளவளத்துறை விரிவுரையார் மனூஸ் அபூபக்கர் பிரதம வளவாளராக கலந்து கொண்டார்.



# இன்று மட்டும் 5 பேரை தாக்கியுள்ளன குளவிகள்



(மஸ்கெலியா செ.தி.பெருமாள்)

இருவேறு பகுதிகளில் குளவி கொட்டுக்கு இலக்காகிய ஐவர் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் இன்று காலை மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள கிலன்டில் தோட்டத்தில் இடம்பெற்றது.

கிலன்டில் பிரிவில் தேயிலை தோட்ட பணியில் ஈடுபட்டு வந்த தொழிலாளி ஒருவரும் வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவரும் குளவிக் கொட்டுக்கு ஆளாகினர்.

மற்றும் சாமிமலை பகுதியில் உள்ள ஓல்ட்டன் தோட்டத்தில் கொழுந்து பறித்து கொண்டு இருந்த வேளையில் பெண் தொழிலாளி இருவர், ஆண் தொழிலாளி ஒருவர் என மூன்று பேர் குளவி கொட்டுக்கு இலக்கிய நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கபட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இன்று மட்டும் ஐந்து பேர் குளவி கொட்டுக்கு இலக்காகினர் என்று மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.



# ஆலையடிவேம்பு சுகாதார அதிகாரியின் பிரிவுக்குச் சென்ற சுகாதாரப் பணிப்பாளர்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்குப் போட்டோ கொப்பி இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு விஜயம் செய்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் இந்தப் போட்டோ கொப்பி இயந்திரத்தைச் சுகாதார வைத்திய அதிகாரியிடம் கையளித்தார்.

பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதன்போது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ஏ.அகிலன் பிராந்திய பணிப்பாளரின் சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்களின் அத்தியாவசியத் தேவைகளை நிவர்த்தி செய்து பொது மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கும் பொருட்டு பிராந்திய பணிப்பாளர் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்.

அந்தவகையில் பிராந்தியத்தில் உள்ள சுகாதார நிறுவனங்களுக்கு கள விஜயங்களை மேற்கொண்டுவரும் பணிப்பாளர், வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக்களையும் சந்தித்து வைத்தியசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடி வருகிறார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் அண்மையில் ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு மின் பிறப்பாக்கி மற்றும் தளபாடங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998







# சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் புனரமைக்கப்பட்ட கட்டடம் திறந்து வைப்பு

(த.சுபேசன்)

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்புவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாடசாலை அதிபர் சிவநாவலன் தலைமையில் இடம் பெற்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் 2024 ஆம் ஆண்டுக்கான பிராந்திய விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் புனரமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியே இவ்வாறு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக அங்கஜன் இராமநாதனும், சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சிக் வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி வணிகர் மன்றத்தினர், பாடசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கட்டிடத் தொகுதியானது அங்கஜன் இராமநாதனுடைய 1.2 மில்லியன் ரூபா பிராந்திய நிதி ஒதுக்கீடு மூலமாக புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.



# ஹட்டன், அம்பகமுவ மாணவர்களுக்கு ஊடக கற்கை நெறி பற்றிச் செயலமர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மத்திய மாகாண பாடசாலை ஊடகப் பிரிவு வலுவூட்டல் திட்டத்தின் கீழ் ஹட்டன், அம்பகமுவ மத்திய மகா வித்தியாலய மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் நிகழ்ச்சி அண்மையில் கல்லூரியில் இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்களின் ஊடக அறிவை மேம்படுத்தி, நவீன சமூக, பொருளாதார, அரசியல் மாறுபாடுகளைப் புரிந்துகொண்டு அவர்களின் எதிர்கால எதிர்பார்ப்புகளுக்கு வழிகாட்டும் அறிவை மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் ஏழு ஊடகக் கலைகளின் பயன்பாட்டை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

மத்திய மாகாணம் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் மேனகா ஹேரத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இந்த பாடசாலை ஊடகக் கழகத்தை நிறுவி வலுவூட்டல் திட்டம் மத்திய மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஊடக உத்தியோகத்தர் நிமல் சந்திரசிறி மஹவத்த, பாடசாலை மாணவர்களின் பங்களிப்பு மற்றும் பாடசாலை ஊடகவியலாளர் கழகத்தை வலுவூட்டுவதற்கும், அதனை செயற்படுத்துவதற்கும் ஆக்க பூர்வமான தொடர்பாடல்களை பயன்படுத்துதல் தொடர்பிலும் இங்கு விரிவுரை நிகழ்த்தினார்.

ஹட்டன் பிராந்திய ஊடகப் பாட இணைப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜெயநந்தனி மற்றும் அம்பகமுவ உயர்நிலைப் பாடசாலை அதிபர் ஏ. ஜி. அம்பகமுவ பாடசாலையின் பிரதி அதிபர் எச். நளின் டி சில்வா, ஊடகச் சங்கத்துக்குப் பொறுப்பான குரு, மாகாண ஊடகப் பிரிவின் அதிகாரிகள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# சாத்தூர் பட்டாசு ஆலை வெடி விபத்து: தாமதமாக தொடங்கிய மீட்புப் பணிகள்

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே முத்தால்நாயக்கன்பட்டியில் தனியாருக்கு சொந்தமான பட்டாசு ஆலையில் இன்று காலை திடீர் வெடி விபத்து ஏற்பட்டது.

இதையடுத்து, தொடர்ந்து பட்டாசுகள் வெடித்து சிதறியதால் மீட்புப் பணிகள் தாமதமாகத் தொடங்கியது.

சிவகாசி அருகே உள்ள விஸ்வ நத்தத்தைச் சேர்ந்தவர் கந்தசாமி. இவர் தி.மு.க. மாநில பொதுக்குழு உறுப்பினராக இருந்து வருகிறார். இவருக்கு சொந்தமான பட்டாசு ஆலை ஒன்று சாத்தூர் அருகே உள்ள முத்தாள் நாயக்கன்பட்டியில் இயங்கி வருகிறது. நாக்பூரில் உள்ள மத்திய பெட்ரோலியம் மற்றும் வெடிபொருள் கட்டுப்பாட்டு துறையின் உரிமம் பெற்ற இந்த பட்டாசு ஆலையில் சுமார் 25 இற்கும் மேற்பட்ட அறைகளில் பட்டாசுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இங்கு 50 இற்கும் மேற்பட்ட வட மாநில தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில், வழக்கம் போல இன்று காலை பட்டாசு தயாரிக்கும் பணிக்கான முன்னேற்பாடாக மருந்து கலவை தயாரிக்கும் பணியில் இங்கு உள்ள தொழிலாளர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். அப்போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட உராய்வு காரணமாக திடீர் வெடி விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து பட்டாசுகள் வெடித்துச் சிதறுவதால் மீட்பு பணியில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

பட்டாசுகள் வெடித்துச் சிதறுவதால் சுமார் ஐந்து கிலோ மீட்டர் சுற்றளவுக்கு அதிர்வு ஏற்பட்டுள்ளது. தகவலறிந்த சாத்தூர் சிவகாசி வெம்பக்கோட்டை தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளன. பத்துக்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் ஆம்புலன்ஸ் வாகனங்கள் மீட்பு பணிக்காக தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன.

பட்டாசு ஆலைக்குள் தொழிலாளர்கள் யாரும் சிக்கி உள்ளனரா? என்ற விவரம் தெரியவில்லை. பட்டாசுகள் வெடித்து சிதறியதால் பட்டாசு ஆலைக்குள் சென்று மீட்பு பணியை தொடங்க முடியாமல் பொலிஸாரும் தீயணைப்பு வீரர்களும் காத்திருந்த நிலையில், மீட்பு பணி நடந்து வருகிறது.

## சின்னத்திரை நடிகை சித்ராவின் கணவரின் விடுதலையினை எதிர்த்து மேல்முறையீடு



சின்னத்திரை நடிகையான சித்ரா கடந்த 2020 ஆம் ஆண்டு டிசம்பரில் ஹோட்டல் ஒன்றில் சடலமாக மீட்கப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பாக சித்ராவின் கணவர் ஹேம்நாத் உள்பட 7 பேர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த திருவள்ளூர் மாவட்ட மகளிர் நீதிமன்றம் ஹேம்நாத்தை விடுதலை செய்து உத்தரவிட்டதை எதிர்த்து சித்ராவின் தந்தை காமராஜ் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார்.

அதில், விசாரணை நீதிமன்றம் அரசு தரப்பு சாட்சிகளின் வாக்குமூலங்களை முறையாக கவனத்தில் கொள்ளவில்லை. எனவே ஹேம்நாத்தை விடுதலை செய்து திருவள்ளூர் மகளிர் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பை ரத்து செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

## இந்தியாவின் மும்பையில் பயங்கரவாத அச்சுறுத்தல்

இந்தியாவின் மும்பையில் பயங்கரவாத அச்சுறுத்தல் காணப்படுவதாக அந்த நாட்டு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவல்களை அடுத்து மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, வழிபாட்டு ஸ்தலங்கள், போக்குவரத்து நிலையங்கள் உள்ளிட்ட பல பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களில் ஒத்திகை பாதுகாப்பு பயிற்சிகளை நடத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.





# ஹிஸ்புல்லா தலைவரை இலக்கு வைத்து இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்தியது

ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவரான ஹசன் நஸ்ரல்லாவை இலக்கு வைத்து லெபனானின் பெய்ரூட் மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

எனினும் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்திய கட்டடத்தில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் இருந்தாரா என்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

பெய்ரூட்டில் புதிதாக 7 வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன என சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் ஹிஸ்புல்லா அமைப்பினருக்குச் சொந்தமான ஆயுதங்களைச் சேமித்து வைத்திருப்பதாகக் கூறப்படும் கட்டடத்தை இலக்கு வைத்தும் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்த வான்வழித் தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டதுடன் 91 பேர் காயமடைந்துள்ளனர் என லெபனான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கள் கிழமை முதல் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் இது வரையில் 800 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

# ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர இடம்

## பிரித்தானிய பிரதமர் ஆதரவு





ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் வழங்கப்பட வேண்டும் என்று பிரித்தானிய பி பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. பொதுச்சபையில் கடந்த வியாழன் அன்று உரையாற்றிய கெய்ர் ஸ்டார்மர்,

"ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் விரிவுபடுத்தப்பட வேண்டும். அரசியல் காரணமாக அது முடக்கப்படக் கூடாது. ஐ.நா. சீர்திருத்தப்பட வேண்டும். அதிக பிரதிநிதித்துவத்துடன், அதிகம் பதிலளிக்கக்கூடியதாக அது திகழ வேண்டும்.

நியாயமான விளைவுகளுக்கு மட்டுமல்ல, அவற்றை அடைவதில் நியாயமான பிரதிநிதித்துவத்தையும் நாங்கள் உருவாக்குவோம். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கும் இது பொருந்தும். அரசியலால் முடங்கிவிடாமல், செயல்படத் தயாராக, அதிக பிரதிநித்துவ அமைப்பாக மாற வேண்டும். பிரேசில், இந்தியா, ஜப்பான் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் ஐ.நா, பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர்களாக வேண்டும்.

மேலும், ஆபிரிக்காவின் பிரதிநிதித்துவமும் அதில் இருக்க வேண்டும். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் இவ்வாறு மாறுவதை நாங்கள் பார்க்க விரும்புகிறோம்." என தெரிவித்தார்.

கடந்த ஜுலை பொதுத் தேர்தலுக்குப் பிறகு பிரித்தானிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட கெய்ர் ஸ்டார்மர், ஐ.நா. பொதுச் சபையின் தனது முதல் உரையை நிகழ்த்தினார்.

முன்னதாக, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் ஐ.நா. பொதுச் சபையில் கடந்த புதன்கிழமை பேசும் போது,

"ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் விரிவாக்கப்படுவதற்கு பிரான்ஸ் ஆதரவாக உள்ளது. ஜெர்மனி, ஜப்பான், இந்தியா மற்றும் பிரேசில் நிரந்தர உறுப்பினர்களாக இருக்க வேண்டும். அத்துடன் ஆப்பிரிக்காவை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு நாடுகளும் இதில் இருக்க வேண்டும்" என்று கூறினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்பதை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் வலியுறுத்தி இருந்தார்.

தற்போது ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் 5 நிரந்தர உறுப்பு நாடுகள் உள்ளன. 10 நிரந்தரமற்ற உறுப்பு நாடுகள் உள்ளன. ரஷ்யா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இருப்பதால் அவை எந்தவொரு உறுதியான தீர்மானத்தையும் வீட்டோ செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளன.

கனடா முரசு
பக்கங்கள் 08
சனிக்கிழமை 28/09/2024

## மிகப்பெரிய பீட்ஸா கனடாச் சந்தையில்

கனடாவின் எட்மாண்டன் பகுதியில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்று மிகப்பெரிய பீட்ஸா வகை ஒன்றை விற்பனை செய்து வருகின்றது.

இந்த பீட்ஸாவை 02




# அடுத்த நம்பிக்கையில்லாப் பிரேரணையிலும் ட்ரூடோவின் அரசாங்கம் தப்பிப் பிழைக்கும்!

**ஒரு வாரத்தில் இரண்டாவது தடவையாக லிபரல் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியைடையும் நிலை தோன்றியுள்ளது.**

**பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கத்திற்கு எதிராக மற்றொரு நம்பிக்கையில்லா பிரேரணையை கன்சர்வேட்டிவ் கட்சி கடந்த வியாழக்கிழமை சபையில் முன்வைத்தது.**

ஏற்கனவே புதன்கிழமை வாக்களிப்புக்கு விடப்பட்ட முதலாவது நம்பிக்கையில்லா பிரேரணையில் தோல்வியடைந்த நிலையில், இந்தப் புதிய நம்பிக்கையில்லாப் பிரேரணையை கன்சர்வேட்டிவ் கட்சி சமர்ப்பித்தது.

இந்த புதிய பிரேரணை மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

முதலாவதை போல் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையும் தோல்வி அடையும் எனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

புளொக் கியூபெக்குவா, புதிய ஜனநாயகக் கட்சி ஆகியன இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கும் சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளன.

இதன் மூலம் ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கத்தின் ஆட்சி காலம் நீடிக்கும் நிலை உள்ளது.

புதிய ஜனநாயகக் கட்சியின் ஆதரவு இல்லாத நிலையில், லிபரல் கட்சி இந்த இலையுதிர் காலத்தில் தொடர்ச்சியான நம்பிக்கையில்லா பிரேரணைகளை எதிர்கொள்ளும் நிலை உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.




# வெளிநாட்டு அரசாங்கத்தின் சார்பில் செயல்பட்ட கனடிய அரசியல்வாதி!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 28

முன்னாள் கனடிய அரசியல்வாதி ஒருவர் வெளிநாட்டு அரசாங்கத்தின் சார்பில் செயல்பட்டார் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

கனடிய பாதுகாப்பு புலனாய்வு சேவை - CSIS - இந்தத் தகவலை வெளியிட்டது.

முன்னாள் கனடிய அரசியல்வாதி ஒருவர் வெளிநாட்டு அரசாங்கத்தின் சார்பாக நாடாளுமன்றத்தில் செல்வாக்கு செலுத்த முயன்றார் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

கனடிய அரசியலில் வெளிநாட்டு குறுக்கீடு ஆணையம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்ட ஆவணங்களில் இந்தத் தகவல் வெளியானது.

இந்த நாடாளுமன்ற 02





# எம்.பிக்கு கொலை மிரட்டல் விடுத்த நபருக்கு வீட்டுக் காவல் தண்டனை!

பிரிட்டிஷ் கொலம்பியா, செப்ரம்பர் 28

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண ரிச்மன்ட் மத்திய தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருக்கு கொலை மிரட்டல் விடுத்த நபருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ரிச்மன்ட் மத்திய தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் வில்சன் மியோவுக்கு எதிராக கொலை மிரட்டல் விடுத்த குற்றசாட்டை பீட்டர் லியு எதிர்கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பேஸ்புக் காணொலி வெளியிட்ட குற்றத்தை ஒப்புக்கொண்ட பீட்டர் லியுக்கு இரண்டு மாத வீட்டுக்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

30 வயதான பீட்டர் லியு தனக்கு எதிரான குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டமையை அடுத்து, கடந்த புதன்கிழமை அவருக்கு 60 நாள் நிபந்தனை தண்டனையை நீதிபதி டயனா வென்டூர் வழங்கினார்.

ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசியல்வாதிக்கு நேரடியான அச்சுறுத்தலாகவும் பொதுவாக, ஜனநாயகத்திற்கே ஒரு அச்சுறுத்தலாகவும் இந்த மிரட்டல் அமைந்திருந்தது என நீதிபதி தனது தீர்ப்பில் கூறினார்.

முன்னாள் கன்சர்வேட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரிடம் இருந்து 2021 தேர்தலில் ரிச்மன்ட் மத்திய தொகுதியை 772 வாக்குகளால் வில்சன் மியோ வெற்றி பெற்றார்.

இவரும் மற்றொரு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் சீனா சார்பு ஆர்வலர்களின் செல்வாக்கால் பயனடைந்தனர் என எதிர்ப்பாளர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

இந்த குற்றசாட்டுகள் ஆதாரமற்றவை என பொது பாதுகாப்பு அமைச்சர் மார்கோ மென்டிசினோ நிராகரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் தண்டனை விதிக்கப்பட்ட பீட்டர் லியு சீனாவில் பிறந்து, சிறு வயதில் கனடாவுக்கு குடிபெயர்ந்தவர்.

இவர் ஐந்து வருடங்கள் கனடிய ஆயுதப் படைகளின் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.




## மிகப்பெரிய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 60 பேர் உட்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

முன்னணி பீட்சா விற்பனை நிறுவனங்களில் ஒன்றான பிக் மாமா மற்றும் பாப்பா பிஸாரியா (Big Mama's and Papa's Pizzeria) என்ற பீட்சா விற்பனை நிறுவனம் இவ்வாறு புதியதாக பீட்சா ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

இந்த பீட்ஸாவின் எடை 20 கிலோ கிராம் என தெரிவிக்கப்படுகிறது. இந்த பீட்ஸாவின் சராசரி விலை சுமார் 350 முதல் 400 டாலர்கள் வரை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பீட்ஸாவை சுமார் 60 துண்டுகளாக வெட்ட முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பீட்ஸாவைத் தயாரிப்பதற்கு மூன்று அல்லது நான்கு பேர் தேவை எனவும் இதனை விநியோகம் செய்வதற்கு இரண்டு பேரின் உதவி தேவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வெளிநாட்டு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் குறித்த விவரங்கள் அல்லது அவர் சார்பாகப் பணிபுரிந்ததாகக் கூறப்படும் நாடு குறித்த விவரங்கள் எவையும் வெளியாகவில்லை.

ஆனால் இது கனடாவின் ஜனநாயகத்தில் நேரடி வெளிநாட்டு தலையீட்டின் முன்னர் அறியப்படாத ஒரு நிகழ்வாகும் என ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மைய ஆண்டுகளில் சந்தேகத்திற்குரிய வெளிநாட்டுத் தலையீடுகளின் ஆறு குறிப்பிடத்தக்க நிகழ்வுகளின் பட்டியலை மற்ற புலனாய்வு அமைப்புகளுடன் இணைந்து CSIS தயாரித்தது.



# குடியிருப்புப் பாடசாலை மறுப்பை குற்றமாகக் கருதுகின்ற சட்டமூலம்

## புதிய ஜனநாயகக் கட்சி நாடாளுமன்றில் சமர்ப்பணம்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 11

குடியிருப்பு பாடசாலை மறுப்பைக் குற்றமாகக் கருதும் சட்டமூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லியா கஷான் இந்தச் சட்டமூலத்தை தனிநபர் பிரேரணை யாக வியாழக்கிழமை சபையில் சமர்ப்பித்தார்.

குடியிருப்புப் பாடசாலை அமைப்பு முறையில் இருந்து உயிர் பிழைத்தவர்கள், அவர்களின் குடும்பங்கள், சமூகங் களுக்கு ஏற்படும் தீங்கை தடுக்க இந்த சட்டமூலம் உத வும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தத் தனிநபர் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், முதற்குடியினர் மக்களுக்கு எதிரான வெறுப்பை ஊக்கு விப்பதற்காக குற்றவியல் சட்டத்தின் கீழ் ஒருவர் குற்றச் சாட்டு எதிர்கொள்ளலாம்.

முதற்குடியினரின் பூர்வீக கலாச்சாரங்கள், மொழிகளை அழிப்பதே இந்த குடியிருப்புப் பாடசாலைகளில் நோக்கம் என லியா கஷான் தெரிவித்தார்.

அரசாங்கம் நல்லிணக்கத்தில் தீவிரமாக இருந்தால், அது குடியிருப்பு பாடசாலை அமைப்பு முறையில் இருந்து உயிர் பிழைத்தவர்கள், அவர்களின் குடும்பங்களை வெறுப்பிலிருந்து பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

முதற்குடியினர் பூர்வீக கலாச்சாரங்கள், மொழிகள், குடும்பங்களின் பாரம்பரியத்தை அழிக்க வடிவமைக்கப்பட்ட ஒரு இனப்படுகொலைதான் இந்த குடியிருப்பு பாடசாலை அமைப்பு எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் லியா கஷான் தெளிவுபடுத்தினார்.

150,000க்கும் மேற்பட்ட குழந்தைகள் குடியிருப்புப் பாடசாலைகளில் இணைய வேண்டிய கட்டாயம் ஏற் பட்டது.

இந்த பாடசாலைகளில் இணைந்த 6,000 குழந்தைகள் இறந்தன என மதிப்பிடப்பட்டுள்ளது.

# வாழ்க்கைச் செலவின் நெருக்கடி கனடாவிலும் மிக மோசமான நிலைமை




ஒன்றாரியோ, செப்ரம்பர் 28

உலகம் முழுவதும் மக்கள் விலை உயர்வு மற்றும் வாழ்க்கைச் செலவின் நெருக்கடியால் அவதிப்பட்டு வரும் இந்த நிலையில், கனடாவில் 95,000 டொலர்கள் ஆண்டுச் சம்பளம் போதவில்லை என்று கூறிய இந்திய தொழில்நுட்ப நிபுணர் சமீபத்தில் வைரலாகியுள்ளார்.

பியுஸ் மொங்கா என்ற பிரபல இன்ஸ்ராகிராம் பக்கத் தில் பதிவிடப்பட்ட காணொலி ஒன்றில், தொழில்நுட்பத் துறையில் பணியாற்றும் பெண் ஒருவர், தனது ஆண்டு வருமானம் மற்றும் கனடாவில் வசிப்பதில் இருக்கும் சிக்கல் குறித்து பேசினார்.

பணியிடத்தின் வகையை பற்றி கேட்டபோது, அந்தப் பெண் ஒரு வங்கி நிறுவனத்தில் பணியாற்றுவதாகவும், தனது 10 ஆண்டு அனுபவத்தை கொண்டு ஆண்டுக்கு 95,000 டொலர்கள் வரையிலான சம்பளம் பெறுவதாகவும் கூறினார்.

ஆனால் இது தற்போதைய பொருளாதார சூழலில் போதுமானது அல்ல என்றும், இங்கு வாழ்க்கை செலவுகள் மிகவும் அதிகம் என்றும் அவர் கூறினார்.



# 40 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற படுகொலையின் கொலையாளி கைது!

கனடாவில் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெற்ற படுகொலை சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

Frobisher Bay பகுதியில் இந்த சம்பவம் 1986 ஆம் ஆண்டு இடம்பெற்றிருந்தது. 15 வயதான சிறுமி ஒருவர் இந்த சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

15 வயதான மேரி ஹேன் பெர்மிங்கம் என்ற சிறுமியே இவ்வாறு கொல்லப்பட்டிருந்தார்.

இந்த கொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஜோப்பே ஹாட்ஸ்டார் என்ற நபரை கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மிகக் கொடூரமான முறையில் இந்த சிறுமி படுகொலை செய்யப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.






# கனடாவில் வீடு கொள்வனவுக்கான சாத்தியங்கள் சாதகமாக அதிகரிப்பு

கனடாவில் வீடுகளை கொள்வனவு செய்வோருக்கு மகிழ்ச்சியான அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

வீடுகளின் விலை குறைவு மற்றும் அடகு கடன் வட்டி விகித மாற்றம் போன்ற நிலைமைகள் வீடுகளை கொள்வனவு செய்வதற்கான சாத்தியத்தை அதிகரித்துள்ளது.

ரேட்ஹப்.சீஏ (Ratehub.ca) என்ற இணைய தளம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் வீடுகளை கொள்வனவு செய்வதற்கான இயலுமை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வீடு ஒன்றை கொள்வனவு செய்வ தற்கான குறைந்தபட்ச வருமான அளவு சராசரி தொகை குறைவடைந் துள்ளது.

12 நகரங்களில் இவ்வாறு வீடுகளின் விலைகள் குறை வடைந்துள்ளன எனத் தெரிவிக்கப் படுகிறது.

குறிப்பாக கனடாவில் விலை உயர்ந்த வீட்டுச் சந்தைகளைக் கொண்ட நகரங்களான ரொறன்ரோ, விக்டோரியா, வான்கூவார் போன்ற பகுதிகளிலும் இந்த மாற்றத்தை அவதானிக்க முடிவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாகவும் வீடுகளை கொள்வனவு செய்வதற்கான இயலுமை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஒருவகை கண் சொட்டு மருந்து தொடர்பில் கனடாவில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது




கனடாவில் பயன்படுத்தப்பட்டுவரும் ஒருவகை கண் சொட்டு மருந்து ஊடாக பாதிப்புகள் ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய மருந்து பொருள் நிறுவனம் இது தொடர்பில் வாடிக்கையாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மொன்றியாலை மையமாகக் கொண்டு இயங்கிவரும் பென்டூஃபார்ம் என்ற மருந்து பொருள் நிறுவனம் இந்தக் கண் சொட்டு மருந்துகளை சந்தையில் இருந்து மீளப் பெற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளது.

இந்தச் சொட்டு மருந்து வகைகளை பயன்படுத்துவதன் ஊடாக கண்ணில் நுண்ணுயிர் தாக்கம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபர்கள் மற்றும் பலவீனமான நோய் எதிர்ப்புச் சக்தி கட்டமைப்பைக் கொண்டவர்கள் இந்த மருந்து வகைகளைப் பயன்படுத்துவதனை தவிர்க்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஆரோக்கியமானவர்கள் பயன்படுத்தினாலும் சில உபாதைகள் ஏற்படக்கூடிய சாத்தியம் உண்டு என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

க்ரோமொலைன் கண் சொட்டு மருந்து (Cromolyn Eye Drops) வகைகளே இவ்வாறு சந்தையிலிருந்து மீளப் பெற்றுக்கொள்ளப்பட உள்ளன.

இந்த மருந்து பொருள்களை விற்பனை செய்ய வேண்டாம் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.




# பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து கனடா வெற்றிகரமாக வெளிவருவது உறுதி!

கனடாவின் பொருளாதார வளர்ச்சி அடையும் என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு நடுப்பகுதியளவில் பிரதான வட்டி வீதம் 3 ஆக குறைவடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இறுதியில் வங்கி வட்டி வீதம் 3.75 வீதம் ஆகவும் அடுத்த ஆண்டு நடுப்பகுதி அளவில் வங்கி வட்டி வீதம் 2.75 வீதம் ஆகவும் குறைவடையும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு பொருளாதாரம் ஓரளவு வளர்ச்சியைப் பதிவு செய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து வெற்றிகரமாக வெளிவரும் எனவுன் எதிர்வு கூறப் பட்டுள்ளது.

முன்னணி நிதி ஆய்வு நிறுவனங்களில் ஒன்றான டெலொயிட் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது.

# கனடாவில் வீட்டை உடைத்து காரைத் திருடிய நபர் கைது!



கனடாவின் ரொறன்ரோ பகுதியில் கார் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட 19 வயதான நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் வீடு ஒன்றை உடைத்து உள்ளே பிரவேசித்து காரின் சாவியை களவாடி காரை எடுத்துச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கென்னடி வீதி மற்றும் பிரிட்ஜ் மவுண்ட் வீதிக்கு அருகாமையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் முன்பக்க ஜன்னலை உடைத்து வீட்டுக்குள் புகுந்து காரின் சாவியை இவர் எடுத்து உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

19 வயதான ஜொனத்தன் பாரத் என்ற நபரே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் களவாடப்பட்ட வாகனம் மீற பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




# அவசரமாக எடின்பரோவில் தரையிறக்கப்பட்ட விமானம்

எயார் கனடா விமான சேவைக்கு சொந்தமான விமானம் ஒன்று அவசரமாக எடின்பரோவில் தரையிறக்கப்பட்டுள்ளது.

அவசர நிலைமையினால் இவ்வாறு தரையிறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோவில் இருந்து பிராங்பேர்ட் நோக்கிப் பயணம் செய்த ஏயார் கனடா விமான சேவை நிறுவனத்திற்கு சொந்தமான ஏ.சீ 843 என்ற விமானமே இவ்வாறு அவசரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளது.

விமானத்தில் பயணம் செய்த பயணி ஒருவருக்கு ஏற்பட்ட மருத்துவ அவசர நிலைமையினால் இவ்வாறு விமானம் தரையிறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பயணிக்கு என்ன உடல் நிலை பாதிப்பு என்பது குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை.

# இரட்டைக் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரைத் தேடி வரும் பொலிஸார்!



கனடாவில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெற்ற இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த சந்தேக நபர் ரொறன்ரோ பெரும்பாக பகுதியில் இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

34 வயதான பிலிப் கிராண்ட் என்ற நபரே இவ்வாறு இரண்டு பேரை படுகொலை செய்திருந்தார். இடாபிகாக் பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதனால் இந்த இருவரும் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மூன்றாம் திகதி இந்த தாக்குதல் சம்பவம் இடம் பெற்றிருந்தது.

இந்த நபரை 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பொலிஸார் அடையாளம் கண்டனர்.

பீல் பிராந்தியத்தைச் சேர்ந்த இந்த கிராண்ட் என்ற நபர் அண்மைய நாள்களில் டொரன்டோ பெரும்பாக பகுதியில் உலவுகின்றார் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அந்த நபரின் படம் ஒன்றையும் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

சந்தேக நபரை யாரேனும் கண்டால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# லெபனானில் இருந்து கனடியர்கள் வெளியேற உதவும் தயார் நிலையில் கனடியப் படையினர்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 28

லெபனானில் இருந்து கனடியர்கள் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டால் அதற்கு உதவும் தயார் நிலையில் கனடிய படையினர் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

லெபனான் நெருக்கடிக்கு மத்தியில் தமது தயார்படுத்தல்களை கனடிய ஆயுதப் படைகள் அண்மைய நாள்களில் மாற்றிக் கொள்கின்றன.

அரசாங்கத்திற்கு அதிக நெகிழ்வுத் தன்மையை வழங்குவதற்காக அந்தப் பிராந்தியத்தில் தமது உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நடவடிக்கையை கனடிய இராணுவம் முன்னெடுக்கிறது.

அங்கிருந்து கனடிய குடிமக்களை வெளியேற்ற உத்தரவிடப்பட்டால் அதற்கு உதவும் வகையில் கனடிய படையினரின் நகர்வுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தில் கனடிய ஆயுதப் படைகள் பல மாதங்களாக திட்டம் ஒன்றைத் தயார் படுத்தி வைத்திருந்ததாகத் தெரியவருகிறது.

ஆனாலும் லெபனானில் அதிகரித்து வரும் பதற்றத்தின் மத்தியில், 48 மணி நேர அவகாசத்தில் கனடிய ஆயுதப் படைகள் கனடாவை விட்டு வெளியேறத் தயாராக இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கை உத்தரவு கடந்த புதன்கிழமை இரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்த வாரம் நிகழ்ந்த தாக்குதல்களில் இரண்டு கனடியர்கள் உட்பட லெபனானில் 700 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

லெபனானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் உடனடியாக 21 நாள் யுத்த நிறுத்தத்துக்கு கனடாவும் நட்பு நாடுகளும் வியாழக்கிழமை அழைப்பு விடுத்தன.

லெபனானுக்கு எதிரான இஸ்ரேல் வன்முறைகளை நிறுத்துமாறு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அண்மையில் அழைப்பு விடுத்திருந்தார்.



